**3. ஏற்கனவே கட்டப்பட்டுள்ள பழைய சமத்துவபுரங்களில் உள்ள வீடுகள், குடிநீர் கட்டமைப்பு, தெரு விளக்குகள் போன்றவற்றை சீரமைக்கும் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.**

24.06.2021 அன்று நடைபெற்ற ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு பதில் அளிக்கும் போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள சமத்துவபுரங்கள் சீரமைக்கப்படும் என அறிவித்ததன் தொடர்ச்சியாக, ஏற்கனவே கட்டப்பட்டுள்ள பழைய சமத்துவபுரங்களை சீரமைப்பதற்காக, பழைய வீடுகளை பழுதுபார்த்தல், குடிநீர் விநியோகப் பணிகள், தெரு விளக்கு பராமரிப்பு, விளையாட்டு மைதானம், பூங்கா பராமரிப்பு,

**6. சிறப்பான சேவைகள் வழங்குவதற்காக 550 கிராம ஊராட்சி அலுவலக கட்டடங்கள், 15 ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள் மற்றும் 500 அங்கன்வாடி மைய கட்டடங்கள் 233.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

ஊரக உள்ளாட்சிகள் மூலம் வழங்கப்படும் சேவைகளை பொதுமக்கள் எளிதாக பெறும் வகையில் தேவையான வசதிகளை உருவாக்குவது இந்த அரசின் முதன்மை குறிக்கோளாகும். அதனடிப்படையில், 2021-22 ஆம் ஆண்டில் 15 ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள், 550 ஊராட்சி மன்ற அலுவலக கட்டடங்கள், 500 அங்கன்வாடி மைய கட்டடங்கள் 233.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**10. பாதுகாக்கப்பட்ட குடிநீரை உறுதி செய்யும் பொருட்டு நீரின் தரத்தை பரிசோதிப்பதற்காக சுய உதவி குழு பெண்களுக்கு பயிற்சி அளித்தல்.**

வீடுகளுக்கு வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை நீர் ஆதாரத்திலிருந்து விநியோகம் வரை கள பரிசோதனை உபகரணங்களைப் பயன்படுத்தி பரிசோதனை செய்து குடிநீரின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக 10.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12,525 ஊராட்சிகளிலுள்ள மகளிர் சுய உதவி குழுக்களை சேர்ந்த 62,625 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

